பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்

மத்தேயு : 5 : 8

மலர் 13
இதழ் 02

செய்தி மலர்
ஜூன் 2012



# செயலாளரிடமிருந்து

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! கர்த்தரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

கடந்த நாட்களில் சபையில் உங்களோடு இணைந்து கர்த்தரின் ஊழியத்தை செய்யும்படியான பாக்கியத்தை கர்த்தர் கொடுத்தபடியால் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். கர்த்தர் கொடுத்த ஊழியத்தினை செய்து முடிக்க சபையாராகிய நீங்கள் கொடுத்த எல்லாவிதமான ஒத்துழைப்புக்காகவும் என்னோடு இணைந்து செயல்பட்ட செயற்குழு உறுப்பினர்களாகிய சகோ.ஜெயசேகர், சகோ.எபினேசர், சகோதரி.அனுஷியா டேவிட்சன் ஆகியோருக்கும் நான் நன்றி செலுத்துகிறேன்.

தொடர்ந்து புதிய செயற்குழுவிற்கும் உங்கள் முழு ஒத்துழைப்பும் கொடுத்து கர்த்தர் நாமம் மகிமைபட செயல்படும்படி அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

இந்த மாதத்தில் நம்மை நாமே சோதித்து பார்க்க வேண்டியது அவசியம். நம்மிடத்திலே ஒரு பொக்கிஷசாலை காணப்படுகிறது அதுதான் நமது இருதயம். மத் 12:35 நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். நம்முடைய இருதயதம் எவ்விதமாயிருக்கிறது?

மத் 5:8 சொல்கிறபடி இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்.

நம்முடைய இருதயம் சுத்தமாக இருக்குமானால் நாம் எப்போதும் இருதயத்தில் கர்த்தரை ஸ்தோத்தரித்து கொண்டே நடக்கலாம். சங் 73:1 சொல்கிறபடி சுத்த இருதயமுள்ளவர்களுக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார். நாம் சுத்தமான, கபடற்ற இருதயத்தோடு இருப்போமானால் கர்த்தர் நமக்கும் நல்லவராகவே இருப்பார்.

ஆகவேதான் சங் 51:10-ல் தாவீது கதறுகிறார் தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் என்று. அவருடைய இருதயம் பாவத்தினால் கறைபட்டிருந்த நாட்களில் தேவனை தரிசிக்க முடியாதபடி தேவனோடு உறவாடமுடியாதபடி உள்ள சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆகவே மனம் உடைந்து கதறுகிறார்.

நீதி 22:11 சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள். ராஜா கூடஅவனுக்கு சிநேகிதனாவான். உன் இருதயம் சுத்தமாக இருக்குமானால் உன் வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் மிகவும் இனிமையாகவும், கரிசனை உள்ளதாகவும் அன்பால் சாரம் ஏற்ற பட்டதாகவும் காணப்படும். அப்போது நம்முடைய வாயின் வார்த்தைகளை கேட்கிறவனுடைய இருதயம் சந்தோஷப்படும் 1பேதுரு1:22 பேதுரு தன் இருதயத்திடம் சொல்வதுபோல் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள். 1பேதுரு4:8 –ல் சொல்கிறார் எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாய் இருங்கள். அன்பு திரளான பாவங்களை மூடும் இயேசு நம்மிடத்திலே பாராட்டின அன்பை நாம் மற்றவர்களிடத்திலே காண்பிக்கவேண்டும்.

2பேதுரு1:5-10வரை வாசிக்கும்போது ஜாக்கிரதையுள்ளவர்களாய் விசுவாசத்தோடே தைரியம், இச்சையடக்கம்,ஞானம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அதோடு அன்பையும் சேர்த்து வழங்கினால் இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. அதுமாத்திரமல்ல கர்த்தர் நம்மை அழைத்த அழைப்பிலே இடறிவிழாதபடி நிலைபெற்றிருக்க மேற்குறிப்பிட்ட அடித்தளம் நம்மைதாங்கும்.

2தீமோத் 2:15 சொல்கிறபடி நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்த ஜாக்கிரதையாயிரு 2 தீமோத் 2:24 கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும் தீமையை சகிக்கிறவனுமாய் இருக்கவேண்டும்.

1தீமோத் 1:5 சுத்தமான இருதயத்திலும் நல்மனசாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பில் நிலைபெற்றுயிராமல் அநேகர் கர்த்தரை விட்டுவிலகிபோகிறவர்களாக மாறிவிடுகிறார்கள். 1தீமோத் 1:7 தாங்கள் சொல்கிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் நியாயபிரமாண போதகராயிருக்கிறவர்களை இனங்கண்டு கொண்டு கர்த்தருக்கே ஊழியம் செய்யுங்கள்.


2 தெச 3:5 கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக!

இவண்

**கர்த்தரின் பணியில்**

**அன்பு சகோதரன்** A. ஜஸ்டின் சுந்தரராஜ்





# தேவ செய்தி

## நற்கிரியை

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

பிரியமான சகோதர, சகோதரிகளே, நம்முடைய சகல கிரியைகளையும் தேவன் அறிகின்றவராக இருக்கிறார். (வெளி 2:2,3,13,19) நாம் செய்கின்ற சிறிதும் பெரிதுமான எல்லா கிரியைகளுக்கும் பலனளிக்கின்றவர் அவரே, வேத புத்தகத்திலும், நியாயபிரமானத்தின் கிரியை (கலா 2:16) மாம்சத்தின் கிரியை (கலா 5:19-21) அந்தரங்கத்தின் கிரியை(ரோமர் 13:12) செத்த கிரியை(எபி 6:1) நீதியின் கிரியை(தீத்து 3:5) என்று கிரியைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது, ஆனால் இவைகளின் நடுவே எபே 2:10 ல் கூறப்படும் 'நற்கிரியை" யை விசுவாசிகாளாகிய நாம் கவனியாது போகிறோம்.

நற்கிரிய என்பது சரீரப்பிரகாரமோ, பொருளாதாரநிலையிலோ நம்மால் இயன்ற நிலையில் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்தல் என்பதாகும். (1 தீமோத் 5:10) நற்கிரியைகளின் முக்கியத்துவத்தை அநேகர் இன்று குறைவாக மதிப்பிடுகின்றனர். ஆவிக்குரிய தன்மைக்கு அப்பாற்பட்டதாக அதை எண்ணுகின்றனர். 'நற்கிரியைகளினால் நாம் இரட்சிக்கப்படவில்லை" ஆனால் நற்கிரியைகளுக்கென்று இரட்சிக்கப்பட்டிருக்கின்றோம். ஆகவே விசுவாசிகளுக்கு விசுவாச வாழ்க்கையில் மட்டும் அல்ல நற்கிரியையிலும் நற்சாட்சி அவசியம்.(1 தீமோத் 5:10)

நற்கிறியை குறித்து வேதம் சொல்லுவது என்ன?

1. நற்கிரியைக்கு கிறிஸ்துவே மாதிரி: (யோ 10:32)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நன்மை செய்கிறவராகவே சுற்றி திரிந்தார்(அப் 10:38) சில வேலைகளில் நாம் செய்த நல்ல காரியம் நமக்கே தீமையாக முடிந்த அனுபவங்கள் நமக்கு உண்டு. இயேசு கிறிஸ்துவை கல்லெரிய முற்பட்டார்கள், உங்களையும் என்னையும் விட்டுவைக்கவா செய்வார்கள்?. அடிச்சுவடுகளை பின்வைத்து போனவரை பின்பற்றி "சோர்ந்து போகாமல் நற்கிரியை செய்வோம்" (ரோமர் 2:7)

2. நற்கிரியை வேத வசனத்தின் உபதேசம் (தீத்து 3:8)

இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் நற்கிரியைகளை செய்ய ஜாக்கிரதையாய் இருக்கும்படி, திட்டமாய் அவர்கள் போதிக்க வேண்டியது அவசியம் காரணம் அவர்கள் நன்மையும் பிரயோஜனமுமானவைகள் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் இன்றைக்கோ புத்தியீனமான தர்க்கங்கள், வாக்கவாதங்கள், சண்டைகள், இவைகளையே யோசிக்கிறார்கள். (தீத்து 3:9) இவைகளால் பக்தி விருத்தி ஒன்றும் உண்டாக்கபோவதில்லை. இவைகள் அப்பிரயோஜனமும் விணுமாயிருக்கிறது. பிரயோஜனமானவைகளையே செய்ய நாடுங்கள்.

3. நற்கிரியை என்பது தேவ சித்தம் (எபி 13:21)

சீர்பொருந்தினவனாக காணப்படுவான். தேவன் தமக்கு பிரியமானதை நம்மில் நடப்பிக்க வேண்டுமென்று விரும்புகிறார். தேவ சித்தத்தின் மையத்தில் வாழ்ந்து, தேவனை பிரியப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறவர்களின் வாழ்வில் நற்கிரியைகளை கண்கூடாக காணமுடியும். அவ்வித செய்கைகளை நம்மில் உண்டாக்குகிறவர் தேவனே. (பிலி 2:13)

4. நற்கிரியை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்பு(மத் 24:35-40)

தேவையுள்ளவர்களின் தேவைகளை சந்திக்கும்போது அல்லது அவர்களுக்கு உதவி செய்யும் போது, அதை அவர்களுக்கல்ல, ஆண்டவருக்கே நாம் செய்கிறோம். இந்த பூமியில் இருக்கும்வரை மட்டுமே நாம் அவருக்கென்று நற்கிரியை செய்ய முடியும். நமக்கு கொடுக்கப்ட்டிருக்கும் ஐசுவரியம், வசதி, வாகனம், ஏன் வாழ்க்கையும் கூட நற்கிரியை செய்யும்படிக்குக் கிடைத்த வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வோம், (1 தீமோத் 6:17,18,19)கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்பவர்கள் ஞானவான்கள்.

5. நற்கிரியைகள் மூலம் பிதா மகிமைபடுகிறார்(மத் 5:16)

நற்கிரியை செய்வது நம்மை நாம் வெளிபடுத்தி காண்பிக்கவே, பெயர், புகழ், அடையவோ அல்ல. நம்முடைய நற்கிரியைகள் எப்பொழுதும் பிதாவை மகிமைபடுத்துவதாகவே அமைய வேண்டும். 'தேவ மகிமையை நோக்கமாய் கொண்டவர்கள் நற்கிரியைகளை செய்யாமல் இருக்கமாட்டார்கள்.

6. நற்கிரியை ஆவிக்குரிய செயல் (கொலோ. 1:10)

நம்முடைய ஆராதனை, ஜெபம், ஊழியம், போன்றவைகளில் தேவன் எவ்வளவாய் பிரியப்படுகின்றாரோ, அவ்வளவாய் நம்முடைய நற்கிரியைகளிலும், அவர் பிரியப்படுகின்றார், இது ஒரு ஆவிக்குரிய கனி, ஆவிக்குரிய அலங்கராம், (1தீமோத் 2:10) ஆவிக்குரிய பலி (எபி 13:16) ஊழியத்திலும், ஜெபத்திலும், வேத தியானத்திலும், மட்டுமல்ல நற்கிரியைகளிலும் நம்மை மாதிரியாய் காண்பிக்க வேண்டும்(தீத்து 2:7)

7. நற்கிரியை செய்ய நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்(எபே 2:10)

நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதின் வெளியரங்கமான அடையாளம், நம்முடைய நற்கிரியையாகும் இரட்சிக்கப்படுவதற்கு முன் நமது கிரியைகள் நல்லவைகளாக இல்லை (எபே 2:2) ஆகவே புதிதாய் பிறந்த நம்மிடம்,நம்முடைய கரியைகளில் மாற்றம் உண்டாயிருக்க வேண்டும். நற்கிரியை செய்ய நமக்கு பக்தி வைராக்கியம் அவசியம் அதற்காகத்தானே அவர் தம்மை தாமே ஒப்புகொடுத்தார்.

நற்கிரியைகளை நாம் உருவாக்குவதல்ல, நமக்காகவே தேவன் அவகைளை ஆயத்தபடுத்தி வைத்திருக்கிறார். (எபே 2:10,பிலி 2:13) நம்முடைய சபையிலே. குடியிருப்பு பகுதியிலே, வேலை பார்க்கும் ஸ்தலத்திலே, படிக்கும் பள்ளியிலே நமக்காக அவைகள் ஆய்த்தப்படுத்தபட்டுள்ளது, ஆனால் அதை நிறைவேற்ற நாமே ஆயத்தமாக வேண்டியது அவசியம் (தீத்து 3:1) நற்கிரியைகள் தேவனால் ஆயத்தப்படுத்தபட்டவை என்பதை அறியும்போது அதை செய்யாமல் நமக்கு இருக்க முடியாது. நமது நற்கிரியைகள் தேவனை மகிமைபடுத்துவதாகவும், புறஜாதிகளுக்கு சாட்சியாகவும் அமையட்டும், (1 பேதுரு 2:12) ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாய் இருந்தும் அதை செய்யாமல் போனால் அது அவனுக்கு பாவமாய் இருக்கம், (யாக் 4:7) ஆகவே தனிப்பட்ட நிலையிலும் குடும்பமாகவும் சபையாகவும், குழுவாகவும், நற்கிரியை செய்ய முற்படுவோம், நாதன் கிறிஸ்து இயேசுவுக்காய் ஆமென்!

# ஆதியாகமம் புத்தகத்தை குறித்த வரலாறும் அதின் பெயர் விளக்கமும்

எபிரேய மொழியில் ஆதியாகமம் 1:1 பெரேசித் (ஆதியிலே) என துவங்குகிறது. இதனுடைய பொருள் தொடக்கம். துவக்கமும் முடிவுமில்லாத இறைவனைத்தவிர மற்ற படைப்புகள் அனைத்தின் தொடக்கம் அல்லது ஆரம்பத்தை இப்புத்தகம் விளக்குவதால் இப்பெயர் பெற்றது. இதன் ஆங்கில பெயர் ஜெனிசிஸ் (Genesis) கிரேக்க வார்த்தையான ஜெனசாஸ் மூலம் உருப்பெற்றது.

ஆசிரியர்

இப்புத்தகத்தின் குறிப்புகளிலிருந்து நான்கு விதமான பகுதிகள் அல்லது பிரிவுகள் (யெகோவா, ஏலோகிம், ஆசாரியர், உபபந்தம்) இணைத்திருப்பதை காணமுடிகிறது அதாவது நான்குவிதமான மூலங்கள் (Source) இப்புத்தகத்தை தொகுக்க பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை சற்று ஒன்றுக்கொன்று வேறுபாடானவை. இதை அடிப்படையாகக் கொண்டு இந்நூலின் ஆசிரியர் யார் என்பதைக் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும் யூதர்களும், கிறிஸ்தவர்களும் பொதுவாக மோசே இந்நூலை தொகுத்தவர் அல்லது எழுதியவர் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

காலம்

உலகம் உருவான நாள்முதல் சுமார் கி.மு. 1800 ஆண்டுவரையுள்ள சம்பவங்களை ஆதியாகமம் தெரிவிக்கின்றது.

வரலாற்றுச் சம்பவங்களின் அடிப்படையில் மோசேயின் காலம் ஏறத்தாழ சரியாக கூறமுடியும். 1இராஜாக்களின் புத்தகத்தில் (6:1) சாலமோன் அரசாண்ட 4ம் வருடம், அதாவது இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டுச் 480 வது வருடம் எருசலேம் தேவாலயக் கட்டடப்பணி ஆரம்பமானது. சாலமோன் நாலாவது ஆட்சி ஆண்டு சுமார் கிமு. 966. எனவே 1446 வது ஆண்டு மோசே வழிநடத்துதல் பணியை மேற்கொண்டார். இப்புத்தகத்தை மோசே எழுதியிருப்பாரானால் 40 வருட வனாந்திர வாழ்க்கையின் கடைசியில் இந்நூலை எழுதியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பின்னணி

ஆதியாகமம் 1-38 அதிகாரங்களில் காணப்படும் நாகரீகம், படைப்பு, வம்சவரலாறு, ஜலப்பிரளயம், புவியியல், மக்களின்-யாத்திரை, ஆடுமேய்த்தல், நிலம் சம்மந்தமான காரியங்கள் அகியவை மெசபட்டோமிய வாழ்க்கைக்கு மிக ஒத்துக் காணப்படுகிறது. இவற்றில் நடைபெற்ற பெரும்பான்மையான சம்பவங்கள் மெசபட்டோமியாவில்

நடைபெற்றதாகவே காணப்படுகிறது. ஆசிரியர் மனிதனின் முதல்வீடான ஏதேன் தோட்டத்தை இப்பகுதியாகவே காண்பிக்கிறார். பாபேல் கோபுரம் கட்டப்பட்டதும், ஆபிரகாம் பிறந்த இடம், ஈசாக்குக் பெண் கொண்டது, யாக்கோபு 20 வருடங்களாக வாழ்ந்தது ஆகியவை இப்பகுதியை மையமாகக் கொண்டது.

39-50 அதிகாரங்கள் எகிப்திய பாரம்பரியத்தை விளக்கக்கூடியதாக அமைகிறது.

## நோக்கமும் - செய்தியும்

ஆதியாகமம் படைப்பின் முழுவிபரத்தையும் தெளிவாக்குகிறது. தேவன் படைப்பின் காரணராகவும், படைப்பின் சிகரமாக மனிதனை தன்னுடைய சாயலின்படி படைத்ததையும், அவர்களுக்கு முழு சுதந்திரம் கொடுத்து உலகை ஆசீர்வதித்ததையும் தெரிவிக்கிறது. முதல் படைப்பான ஆதாம், ஏவாள் என்பவர்கள் கீழ்படியாமல் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து அதற்கு தன்டனையாக சாபத்தை பெற்றுக்கொண்டதையும் விளக்குகிறது. எனினும் இறைவனை செய்லாற்றுகிறவராகவே சித்தரிக்கிறது. இரட்சிப்பின் ஆரம்பமாக இறைவன் ஒரு நபரை, குடும்பத்தை வம்சத்தை தெரிந்து கொண்டு, உலகத்திற்கு ஆசீர்வாதத்தை கொடுக்க விரும்புவதை தெரிவிக்கிறது. பல கடவுள் வணக்கதிற்கு வழிதவறிய மக்களை ஒரு கடவுள் வணக்கத்திற்கு நேராக வழிநடத்தியதை விவரிக்கிறது.

ஆதியாகமத்தில் தொடக்கங்கள்

1. ஆதியாகமம் 1:1-25 — உலகத்தின் தொடக்கம்
2. ஆதியாகமம் 1:26-2:25 — மனித குலத்தின் தொடக்கம்
3. ஆதியாகமம் 3:1-7 — பாவத்தின் தொடக்கம்
4. ஆதியாகமம் 3:8-24 — இரட்சிப்பு உறுதிமொழியின் தொடக்கம்
5. ஆதியாகமம் 4:1-15 — குடும்ப வாழ்வின் தொடக்கம்
6. ஆதியாகமம் 4:16-9:29 — மனிதன் உண்டாக்கிய நாகரீகத்தின் தொடக்கம்
7. ஆதியாகமம் 10-11 — உலக நாடுகளின் தொடக்கம்
8. ஆதியாகமம் 12-50 — எபிரேய மக்களின் தொடக்கம்

# 2012 மே மாத வேத வினாவிற்கான பதில்கள்.

1. பவுல் (ரோமர் 12:12)
2. பாவம் (ரோமர் 14:23)
3. ஆபிரகாம் (ரோமர் 4:21)
4. கிறிஸ்து (ரோமர் 5:6)
5. பவுல் (ரோமர் 12:10)
6. பெர்சியாள் (ரோமர் 16:12)
7. (ரோமர் 1:24)
8. (ரோமர் 1:28)
9. (ரோமர் 12:9)
10. பவுல் (ரோமர் 9:1)
11. ஆபிரகாம் (ரோமர் 4:20,21)
12. (ரோமர் 11:26)
13. (ரோமர் 11:2)
14. (ரோமர் 3:14)
15. (ரோமர் 12:11)

## 2012 மே மாத வேத வினாவிற்கு விடை எழுதியவர்கள்

சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. சுகந்தி தம்புகுமார்
சகோதரி. ஜெபா
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோதரி. சாந்தி ஸ்ரீனிவாசன்
சகோதரி. பிங்கி சாம்

சகோதரி. மரகதம் ஸ்டீ:பன்
சகோதரி. ஹேனா எசேக்கியேல்
சகோதரி. அனுஷூயா டேவிட்சன்
சகோதரி. விக்டோரியா ராஜன்
சகோதரி. லதா கிறிஸ்டோபர்
சகோதரி. ஜீனா சதீஷ்குமார்

சகோதரர். மணிராஜ்
சகோதரர். ஜான்ஸன்
சகோதரர். ரெமி ஜார்ஜ்

சகோதரர். சந்திரகுமார்
சகோதரர். ஜான்
சகோதரர். சுதாகர்

**சபை வாக்குத்தத்தம் – 2012**

பலங்கொண்டு திடமனதாயிரு திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். யோசுவா 1:9

# 2012 ஜூன் மாத வேத வினா பகுதி

1. ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை என்று சொன்னவன் யார்?

2. ஆரோனின் மனைவி பெயர் என்ன?

3. மேசேயின் மனைவி பெயர் என்ன?

4. தன் முகம் பிரகாசிப்பதை அவன் அறியாதிருந்தான் அவன் யார்?

5. அக்கினி ஜீவாலையில் மோசேக்கு தரிசனமானவர் யார்?

6. மீதியான் தேசத்த ஆசாரியன் (மோசேயின் மாமன்) பெயரென்ன?

7. எங்கள் அக்கிரமத்தையும், எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களை உமக்கு சுதந்திரமாக, ஏற்றுக்கொள்ளும்' என்றது யார்?

8. பாவ அறிக்கை செய்து 'கர்த்தர் நீதியுள்ளவர்' என்று சொன்னது யார்?

9. மிகவும் பெரியவனாய் இருந்தான்' இவன் யார்?

10. பரிதானம் பார்வையுள்ளவனை குருடாக்கும் என்று சொன்னவர் யார்?

11. கருக்கான கல்லினால் தன் மகனுக்கு விருத்தசேனம் பண்ணினவள் யார்?

12. ஒரு பலி பீடத்தை கட்டி அதோடு பன்னிரெண்டு தூண்களையும் நிறுத்தினவன் யார்?

13. திரளான தண்ணீர்களின் மேல் ஈயம் போல அழிந்து போனவர்கள் யார்?

14. கல்லை போல ஆழங்களில் அழிந்துபோனவர்கள் யார்?

15. அறுநூறு பிரதான இரதங்களையுடைவன் யார்?

விடைகளை வருகின்ற **20-06-2012** க்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **யாத்திராகமம்** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

 "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக". ரோ 16:20

## இந்த மாதம் பிறந்த நாளைக் சிறப்பிக்கிறவர்கள்

செல்வன் - வெங்கடேஷ் ராஜன்
செல்வன். சாமுவேல் சோபர்ஸ் ஸ்டாலின்
செல்வன் - ஜோஸ்வா ட்டோனி
செல்வன். ரோனால்டோ பால்ராஜ்
செல்வன் - சாம்ஸன் ஃபிலிஃப்
செல்வன் - ஜான் ஜெரேமியா மில்லர்
செல்வன் - காலேப் தாமஸ்
செல்வன் - ஜோஸ்வா ஜான்ஸன்
செல்வன் - ஷெர்வின் டைடஸ்
செல்வன் - ஜேக்கப் நதானியேல் ஜெயகுமார்

செல்வி . ஜெஸ்லி டேனியல்
செல்வி- சாரா கிரேஸ் சாம்ஸன்
செல்வி- நோஸ்லி யோவா
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி- ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. சாரா ஆல்ஃபஸ் ஜேம்ஸ்
செல்வி. சோபியா ஜாஸ்மின்
செல்வி- ஜெபிலா ஷிரின்
செல்வி- ஆன்சிலி ஐ.சிங்

சகோதரி. எஸ்தர் விசு
சகோதரி. டெய்ஸி எபிநேசர்
சகோதரி. நிர்மலா ஆரோக்கியதாஸ்
சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோதரி. அனிதா ஜஸ்டின்
சகோதரி. இசைவானி வில்கின்ஸ்
சகோதரி. வித்யாவதி ஜெயசந்திரன்
சகோதரி. விஜயா வின்சன்ட்
சகோதரி. பிரேமிதா ரூத் அறிவுச்சுடர்
சகோதரி. வளர்மதி

சகோதரர்.மனோகரன்
சகோதரர். வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோதரர்.பால் புருஷோத்தமன்
சகோதரர். எஸ்ரா டேனியல்
சகோதரர். ஜீவா
சகோதரர். கிரண்குமார்
சகோதரர். R.ஸ்டீஃபன்
சகோதரர். பால் பாண்டியராஜ்
சகோதரர். அந்தோனிசாமி
சகோதரர். ஜஸ்டின்
சகோதரர். சுதாகர்
சகோதரர். ஜாய்ஸன்

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" .ஆதி 12:2

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி-திரு. ஜெகநாதன்
திருமதி-திரு. சேகர்
திருமதி-திரு. ஏசுதாஸ் ஆரோக்கியதாஸ்
திருமதி-திரு. ஜான் வெஸ்லி
திருமதி-திரு. எஸ்ரா டேனியல்
திருமதி-திரு. ஜெயசந்திரன்
திருமதி-திரு. டேவிட் ஜெயகுமார்
திருமதி-திரு. ஐசக் துரை
திருமதி-திரு. சத்திஷ்குமார் எத்திராஜ்
திருமதி-திரு. R.ஸ்டீஃபன்
திருமதி-திரு. சஜின் ராஜன்

# 2012 ஜூன் மாத ஆலய ஆராதனை

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4 -10 முதல் 5-45 வரை

| நாள் | ஆராதனை செய்தி |
|---|---|
| 01-06-2012 | புதிய செயற்குழு பதவி ஏற்பு |
| 08-06-2012 | சகோ.ஐசக்துரை - சகோ. ஸ்டாலின் |
| 15-06-2012 | சகோ. மோகன் தேவானந்தன்<br>Jesus Comforts Ministries |
| 22-06-2012 | உபவாச திருவிருந்து ஆராதனை |
| 29-06-2012 | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் சகோ. எபிநேசர் |

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5-00 முதல் 6-15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 03-06-2012 | சகோ. ஐசக் துரை |
| 10-06-2012 | சகோ. விசு |
| 17-06-2012 | சகோ. ரவிச்சந்திரன் |
| 24-06-2012 | சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ் |

14/06/2012 அன்று முழு இரவு ஜெபம்

இடம் : பரிசுத்த பவுல் ஆலயம், அஹமதி குவைத்.

நேரம் : இரவு 11:00 முதல் காலை 3:00 மணி வரை

13/06/2012 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை

இடம் : சகோதரி கிலாடிஸ் பாப்பி அவர்கள் இல்லம் மங்கா:ப்

29/06/2012 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை

இடம் பின்னர் அறிவிக்கப்படும்

# குடும்ப பகுதி

## கிறிஸ்தவ குடும்பம் பரலோகத்தின் வாசல்

## இயேசு இருந்த இடத்தில் குறைவு !!!!!

**கீழ்படிந்தார்கள்**:-

இயேசு வேலைகாரரை நோக்கி, அங்கே இருந்த தொட்டிகளில் தண்ணீர் நிரப்ப சொன்னார், அப்படியே அவர்கள் நிரப்பினார்கள். பின்பு அவர்களை நோக்கி மொன்டு கொண்டு போய் கொடுங்கள் என்று கூறினார். அவர்கள் இயேசு சொன்னபடியே கொண்டு போய் கொடுத்தார்கள். என்ன ஆச்சர்யம்.

இயேசு தண்ணீரில் கை வைத்து ஆசீர்வதிக்கவில்லை. திராட்சை இரசமாக்கும் என்று ஜெபிக்கவில்லை, ஸ்தோத்திரம் செய்யவில்லை. வேலைகாரர் இயேசு சொன்னபடியெல்லாம் செய்தவுடன் தண்ணீர் திராட்சை இரசமாக மாறியது. பந்தி வசாரிப்புகாரனிடத்தில் கொண்டு போய் கொடுத்தவுடன் தண்ணீர் திராட்சை இரசமாக மாறிவிட்டது.

**கீழ்படிதல் அற்புதம் நிகழ்த்தியது**.:-

வேலைகாரர்கள் எதை பற்றியும் யோசிக்கவில்லை. எப்போதும் உள்ள தண்ணீர், எப்பொழுதும் உள்ள தொட்டிகள். அவர்களே தண்ணீரை தொட்டியில் நிரப்பினார்கள். அவர்களே மொண்டார்கள். அவர்களே கொண்டு பொய் கொடுத்தார்கள். தண்ணீரை எப்படி திராட்சைரசம் என்று கொடுப்பது என்று தயங்கவில்லை. இயேசு என்ன சொன்னாரோ அதன்படி அப்படியே கேள்வி கேட்காமல் கீழ்படிந்தார்கள். கீழ்படிதல் பூரணமாகும் போது அற்புதம் நடந்தது. கீழ்படிந்தார்கள். கீழ்படிதல் பூரணமாகும் போது குறைவு நிறைவானது.

**கீழ்படிதல் உண்டா**?

அன்பானவர்களே! உங்கள் குறைவு நிறைவாக கீழ்படிதல் அவசியம். கர்த்தர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள். கஷ்டமான காரியமாக இருந்தாலும் கர்த்தருக்கு கீழ்படியுங்கள். ஞானஸ்தானம் எடுக்க கர்த்தர் உங்களிடம் பேசினால் உடனே கீழ்படியுங்கள்.. தசமபாகம் கொடுக்க கர்த்தர் உங்களிடம் பேசினால் உடனே கீழ்படியுங்கள், நகைகளை கழற்ற சொன்னால் உடனே கர்த்தருக்கு கீழ்படியுங்கள். உழியத்திற்கு போக சொல்லி ஆண்டவர் பேசியால் உலகப்பிரகாரமான வேலையை விட்டு கர்த்தரின் ஊழியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளளைகளுக்கு ஊழிய அழைப்பு இருந்தால் உடனே அதற்கு ஆயத்தப்படுத்தி அனுப்புங்கள். கர்த்தர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் அற்புதம் நடக்கும் அதிசயம் நடக்கும் குறைவு நிறைவாகும், உங்களது தேவைகளை நிறைவாக்க கர்த்தர் இன்னும் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதுதான் பாக்கி. இன்னும் இருக்கிறது. கர்த்தர் சொன்ன காரியங்களுக்கு கீழ்படிய மனமில்லாமல் நீங்கள் இருப்பதினால் குறைவு நிறைவாக இருக்கிறது. உங்கள் குறைவுக்கு காரணம் . கர்த்தர் ஜெபத்தை கேட்காதது காரணமல்ல, நீங்கள்

கீழ்படியாமல் இருப்பதே காரணம், எதிர்காலத்தை குறித்து யோசிக்காதீர்கள். மற்றவர்கள் என்ன நினைப்பர்களோ என்று நினைக்காதீர்கள். உங்கள் மூளையினால் கணக்கு போடாதீர்கள். கர்த்தர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் குறைவு நிறைவாகும். குடும்பத்தில் ஒரு நிறைவான சந்தோஷம் நிலவும் உங்களின் கீழ்படிதலினால் உங்கள் குடும்பம் அந்த நிறைவான சந்தோஷத்தை அனுபவிக்க முடியும்.

## கீழ்படிவது கஷ்டம்: –

சில சமயங்களில் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்படிவது நமது அறிவின்படி மிகவும் கடினமானதாக இருக்கலாம். திராட்சை ரசம் குறைவை நீக்க கர்த்தர் தண்ணீரை, கைகால் கழுவும் பயன்படுத்தும் தண்ணீர் வைக்கப்படும் தொட்டியில் ஊற்ற சொன்னார். திராட்சை இரசமாக மாற்ற எதையும் செய்யாமல், ஊற்றிய தண்ணீரை ஊற்றினவர்களையே கொண்டு கொடுக்க சொல்கிறார், தண்ணீரை எப்படி திராட்சை ரசம் என்று கொடுப்பது என்பதை பற்றி வேலைகாரரர்கள் யோசிக்கவில்லை. அறிவை பயன்படுத்தவில்லை தண்ணீரை பார்க்கவில்லை, இயேசுவின் வார்த்தையை மட்டும் நம்பி கீழ்படிந்தார்கள் என்ன அற்புதம்! அன்று அற்புதத்தை காண்பதற்கு முன் கீழ்படிந்தார்கள். ஆனால் இன்று?

பிரவாகித்து கரைபுரண்டு போன யோர்தான் கர்த்தருடைய வார்த்தையால் இரண்டாக பிரியவில்லை. கர்த்தர் சொன்னபடி கீழ்படிந்து வெள்ளமாக விரைந்து ஓடின. தண்ணீர் மிக தையிரமாக உள்ளங்காள்களை ஆசாரியர்கள் வைத்த போதுதான், யோர்தான் இரண்டாக பிளந்தது உள்ர்ந்த தரையாக மாறியது, இஸ்ரவேலர் கடந்து செல்லும் பாதையானது. யோர்தான் இரண்டாக பிளந்த அற்புதம் கர்த்தருயை வார்த்தைக்கு ஆசாரியர்கள் கீழ்படிந்ததினால்தான் நடந்தது(யோசுவா 3:8 – 15:17)

ஒரு ஊழியக்காரரின் அனுபவம்: –

அவரின் கடிதத்தில் இருந்து. ‘ என்னை ஆண்டவர் 1976ஆம் ஆண்டு இறுதியில் கர்த்தர் அடிமையிடம் வேலையை ராஜினாமா செய்யும்படி கூறினாா். தயங்கினேன் ஆண்டவரே வேலையை விட்டால் நான் என் குடும்பத்தை எப்படி காப்பாற்றுவது. என் குடும்பத்தின் தங்கை தம்பிகளை எப்படி படிக்கவைப்பது. எப்படி அவர்களுக்கு திருமணம் செய்து கொடுப்பது .என்று பல கேள்விகள். சொந்த வீடுகள் இல்லை, சேமிப்பும் இல்லை, என்னுடைய அப்பா ஓய்வு பெற்றால் அப்படிபட்ட கால கட்டத்தில் ஒரு சொற்பான தொகைதான் வரும். நானோ வீட்டில் முத்த மகன் குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்பு முற்றிலும் என்னுடையது அப்படிபட்ட சூழ்நியைில் அப்படியே என் குடும்பத்தை விட்டு சென்றால் உலகம் என்னை என்ன சொல்லும், என்று ஒரே மன குழப்பம், இப்படிபட்ட சூழ்நநிலையில்தான் கர்த்தருடைய ஊழிய அழைப்பு. பிரியமனவர்களே இவ்வளவு குறைவு உள்ள இந்த சமயத்தில் நான் கர்த்தருடைய வார்த்தைக்கு எப்படி கீழ்படிவது, இந்த காலத்தில் இருவர் வேலை செய்யும்போதே பற்றாக்குறை அப்படி இருக்க ஒருவருக்கு கூட வேலை இல்லை என்றால் எப்படி குடும்பத்தை நடத்துவது, யோசித்தால் கீழ்படிய முடியவில்லை. இருந்தாலும் இறுதியில் என் அறிவிக்கு கீழ்படிமாமல் ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்தேன். ஏனெனில் அழைத்தவர் உண்மையுள்ளவர் ஆமென் ஆல்லேலூயா?

(இன்னும் தொடரும்)

# கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்துமாகக்கூடவோம்

## (Being ready for the coming of Christ )

எனவே நாம் தொடர்ச்சியாக ஜெய ஜீவியம் செய்வதற்கு அந்தரங்கத்தில் வாழும் ஓர் திவ்விய வாழ்க்கை மிகுந்த அவசியமாயிருக்கிறது. (நீதி 24:10) ஆம் வசனம் 'ஆபத்துகாலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலன் குறுகியது' என கூறி எச்சரிக்கிறது. ஆபத்துகளை போன்று நம் ஜீவியத்தில் தோன்றும் சோதனைகளும் பாடுகளுமே நாம் எவ்வளவு பெலன் உடையவர்களாய் இருக்கிறோம் அல்லது எவ்வளவு பெவீனமாய் இருக்கிறோம் என்ற உண்மையை வெட்டவெளிச்சமாக்குகிறது. பத்து கன்னிகைகளின் உவமானத்தில் ' மணவாளன் வரத்தாமதித்ததே' ஆபத்தின் நேரம் அல்லது சோதனை நேரம் ஆகும். யோவான் ஸ்நானகன் சிறை காவலில் வைக்கப்ட்டிருந்த போது அவனுக்கு உதவும்படி இயேசு உடனடியாக வராததின் நிமித்தம் அவனுடைய விசுவாசம் சற்றே தளர்ந்து போனது (மத் 11:2..3). அதே போல லாசரு வியாதிப்பட்ட போது மரியாளுக்கும் மார்த்தாளுக்கும் ஒத்தாசை செய்யும்படி இயேசு உடனடியாக வராததினால் அவர்களும் தங்கள் விசுவாசத்தை தளர விட்டார்கள். (யோ 11:21,22)

இவ்வாறு நம்முடைய உண்மையான ஆவிக்குறிய தன்மையை 'காலமே' பதில் சொல்ல வேண்டியதாய் இருக்கிறது.

ஆம். தன் விசாசத்தின் முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கபடுவான்! மேலும் ஒருவன் தன் அந்தரங்கத்தில் எண்ணையாகிய திவ்விய வாழ்கையை சேகரித்திருக்கிறானா? அல்லது இல்லையா? என்பதையும் காலமே அம்பலப்படுத்துகிறது இன்று அநேகர் விதைப்பவனின் உவமானத்தல் அதிக மன்னில்லாத இடத்தில் விதைக்கப்பட்டவர்கள போலவே இருக்கிறார்கள். இவர்கள் வசனத்தை கேட்டவுடன் துரிதமாய் முளைத்துவிடுகிறார்கள். ஆனால் இவர்கள் ஆழமான மண்ணில்லாதவர்களாய் . அல்லது ஜீவனில்லாதவர்களாய் காணப்படுகிறார்கள் (மாற்கு 4:5) இதிநிமித்தமே ஆரம்ப விசுவாசிகள் ஆவிக்குறியவர்கள்தானா? அல்லது முழு இருதயம் கொண்டவர்கள்தானா? என்பதை மதிப்பிடுவது மிகவும் கடினமாயிருக்கிறது. நாம் சற்று பொருமையுடன் காத்திருந்தால் 'காலம்' ஒவ்வொன்றையும் வெளியறங்கமாக்கிவிடும். இதை மனதில் கொண்டே தங்கள் ஜீவியத்தை மகிமையுள்ளதொன்றாய் முடித்தவர்களை மாத்திரமே நோக்கி பார்த்து அவர்களுடைய விசுவாசத்தை பன்பற்றும்படி தேவனுடைய வார்த்தை நமக்கு புத்தி சொல்கிறது. (எபி 13:7)

ஆகவே நம்மை சுற்றியுள்ள மனுஷர்கள் காணமுடியாத நம் அந்தரங்க வாழ்க்கையாகிய சிந்தைகள், மனோபாவங்கள் நோக்கங்களில் கானும் பரிசுத்த ஜீவியமும், தேவனுடைய பார்வைக்கு முன்பாக வாழும் ஒரு உண்மையான ஜீவியமுமே கிறிஸ்துவின் வருகைக்கு நம்மை ஆயத்தமாவதற்குரிய சரியான வழியாகும். பாத்திரத்திலிக்கும் எண்ணையை போன்றது. (இரகசியங்கள் தொடரும்)

# உனக்கு எச்சரிக்கை

## 1. கேளாதே:

என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களை நீ கேளாதே. (நீதி.19:27)

## 2. நினையாதே:

அச்சமின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாகத் தீங்கு நினையாதே. (நீதி.3:29)

## 3. எண்ணாதே:

(1) என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே.... (நீதி.3:11)

(2) நீ உன்னை ஞானியென்று எண்ணாதே,.... (நீதி.3:7)

## 4. சொல்லாதே:

(1) உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய்த்திரும்பவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே. (நீதி.3:28)

(2) அவன் எனக்குச் செய்த பிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன், அவன் செய்த செய்கைக்குத் தக்கதாக நானும் அவனுக்குச் சரிக்கட்டுவேன் என்று நீ சொல்லாதே. (நீதி.24:29)

## 5. பேசாதே:

நியாயமின்றிப் பிறனுக்க விரோதமாய்ச் சாட்சியாக ஏற்படாதே: உன் உதடுகளினால் வஞ்சகம் பேசாதே. (நீதி.24:28)

## 6. சாராதே:

....., சுயபுத்தியைச் சாராதே. (நீதி.23:4)

## 7. சேராதே

(1) மதுபானப்பியனையும் மாம்சப்பெருந்தீனிக்காரரையும் சேராதே. (நீதி.23:4)

(2) பரஸ்திரியின் வாசலைக் கிட்டிச்சேராதே. (நீதி.5:8)

## 8. விடாதே:

(1) பிள்ளையைத் தண்டியாமல் விடாதே. (நீதி.23:13)

(2) உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமை கொள்ள விடாதே (நீதி.23:17)

(3) உன் இருதயத்திலே பரஸ்தரியின் அழகை இச்சியாதே: அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே. (நீதி.6:25)

(4) புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே.... (நீதி.4:13) (5) உன் சிநேகிதனையும், உன் தகப்பனுடைய சிநேகிதனையும் விட்டுவிடாதே: (நீதி.27:10)

## 9. இடங்கொடாதே:

உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே,... (பிர.5:6)



## 10. தாமதியாதே:

நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே,... (பிர.5:4)

## 11. சம்மதியாதே:

என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே. (நீதி.1:10)

## 12. கொள்ளாதே:

(1) உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே,... (பிர.7:9)

(2) பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே... (நீதி.24:1)

(3) கொடுமையுள்ளவன்மேல் பொறாமை கொள்ளாதே.. (நீதி.3:31)

(4) திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே. (நீதி.23:10)

## 13. தள்ளாதே:

என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. (நீதி.1:8)

## 14. நில்லாதே:

(1) ராஜாவின் சமுகத்தில் மேன்மை பாராட்டாதே: பெரியோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே. (நீதி.25:8)

(2) பொல்லாத காரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே,.. (பிர.8:3)

## 15. நடவாதே:

(1) ..... தீயோருடைய வழியில் நடவாதே. (நீதி.4:14)

(2) .... உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே. (நிதி.22:24)

## 16. விரும்பாதே:

தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்... (நீதி.20:13)

## 17. கொள்ளையிடாதே:

ஏழையாயிக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே! (நிதி.22:22)

## 18: எரிச்சலாகாதே:

பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலாகாதே (நீதி.24:19)


**19: வழக்காடாதே:**

ஒருவன் உனக்கு தீங்குசெய்யாதிருக்க, காரணமின்றி அவனோடே வழக்காடாதே. (நீதி.3:30)

## 20. விற்காதே:

சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே... (நீதி.23:23)

# சகோதரிகள் பகுதி



## பரலோக ஆசிர்வாதம், பூலோக ஆசீர்வாதம்

**கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையால் மீண்டும் இந்த மாத இதழின் மூலம் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்தளிக்கும்படியான சந்தர்பத்தை கொடுத்த தேவனுக்கு நன்றியை ஏறெடுத்துக் கொள்கிறேன்.**

**கடந்த இரண்டு ஆண்டுகளும் எல்லா காரியங்களிலும் எனக்கு பக்கபலமாக இருந்த ஆண்டவருக்கு முதலில் என் நன்றியை ஏறெடுத்துக்கொள்கிறேன். கர்த்தருடைய பணியில் எனக்கு உறுதுணையாக இருந்த அனைத்து சகோதரிகளுக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியை ஏறெடுக்கிறேன்.**

**கொடுத்த இந்த சந்தர்பத்தில் நாம் ஆண்டவருடைய வார்த்தையை இரண்டு காரியங்களை கொண்டு தியானிக்க இருக்கிறோம், ஆவியானவர்தாமே நமக்கு கூட இருந்து உதவி செய்வாராக. அன்பானவர்களே பரலோக ஆசீர்வாதம் என்று ஒரு பகுதியும், பூலோக ஆசீர்வாதம் என்று ஒரு பகுதியை குறித்தும் நாம் தியானிக்கலாம், முதலாவதாக பரலோக ஆசீர்வாதம் என்பதை குறித்து தியானிப்போம்**

### பரலோக ஆசீர்வாதம்

நம் தேவன் பரலோகத்தின் தேவன் அங்கே அவர் வாசம் செய்கிறவராயிருக்கிறார். அங்கே நாம் பிரவேசித்து அங்குள்ள ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமானால். 'பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.'(மத் 7:21) வாசிப்பது போல நாம் பிதாவின் சித்தம் செய்கிறவராக இருக்க வேண்டும், அப்படியாக தேவ சித்தம் நம்மில் நிறைவேற வேண்டுமானால், நம்மை அவர் கரத்தில் தாழ்த்தி அர்பணிக்க வேண்டும். அப்படியாக நாம் வாழும்போது பரலோகத்தில் பிரவேசிக் தகுதியுள்ளவர்களாயிருக்கிறோம், தேவனோடு நம்மை உட்கரா செய்கிறார். (எபேசி 2:7) அங்கே மேன்மையும், நிலையான சுதந்திரம் உண்டு நாம் தேவ தூதர்கள் போல இருப்போம். அங்கே ஆனந்தமும் பேரின்பமும் உண்டு ஆம் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள வாஞ்சிப்போமாக!

பூலோக ஆசீர்வாதங்கள்

உலகத்தில் நாம் வாழும் போது, கர்த்தர் நமக்கு தரும் மாம்சீக் பிரகாரமாகன ஆசீர்வாதங்கள், அதாவது ஆஸ்தி, அந்தஸ்து, பதவி போன்றவைகள்.

இரட்டிப்பான இரண்டு ஆசீாவாதங்களையும் பெற நாம் என்ன செய்ய வேண்டும். என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக்கொடுப்பேன். 2 நாளா 7:14 ல் வாசிப்பது போல நாம் அவருக்கு முன்பாக தாழ்த்தி, அவர் முகத்தை தேடி, பொல்லாத வழிகளை விட்டு திரும்பும்போது, கர்த்தர் கேட்டு பாவத்தை மன்னித்து ஷேமத்தை கொடுக்க வல்லவராயிருக்கிறார்.

நாம் பிறக்கும்போதே பாவிகளாக பிறக்கிறோம், என் தாய் என்னை பாவத்தில் கர்பந்தரித்தாள் என்று வேதத்தில் வாசிக்கிறோம், நமக்கு பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். அதன்படியாக நாம் பாவி என்பதை உணர்ந்து நம்மை தாழ்த்தி அவரை தேடும்போது நம்மை ஆசீர்வதிக்க தேவன் வல்லவராயிருக்கிறார்.

உதாரணமாக ஆகாப் ராஜா நாடோத்துடைய திராட்சை தோட்டத்தை அபகரிப்பதற்காக,அவன் தேவனையும் ராஜாவையும் தூஷித்தான் என்று பொய்சாட்சி சொல்லி, கல்லெறிந்து நாடோத்தை கொன்ற போது தேவன் எலியா தீர்க்கதரிசி மூலமாக அவன் மேல் பொல்லாப்பை வரப்பண்ணுவேன்' அவன் சந்ததியை அழித்து போடுவேன் என்று கண்டித்தார். அதை கேட்ட ஆகாப்ராஜா தன் வஸ்திரத்தை கிழித்து உபவாசம் பண்ணி, இரட்டிலே படுத்து தன்னைதானே தாழ்த்தினபடியால் தேவன் அவன் மேல் இரக்கங்கொண்டு அந்த பொல்லாப்பை அவன் நாட்களில் வரபண்ணமாட்டேன், என்று சொன்னதாக வேதத்தில் வாசிக்கிறோம். ஆகாப்ராஜா தன்னை தாழ்த்தினான். பொல்லாப்பு அவனை விட்டு விலகியது ஆசிர்வாதத்தை பெற்றுக் கொண்டான்.

கர்த்தர் தாழ்மையுள்ளவர்களை நோக்கிப்பார்க்கிறார் ஒருவன் தன்னை தாழ்த்தினால் உயர்த்துகிறவர் நம் தேவன், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறவர் நம் தேவன்.


தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம். (நீதி 22:4) என்று வாசிக்கறோம். அதாவது ஆசீர்வாதமும் நித்தியத்தில் கிடைக்கும் மகிமையுயே !

ஆம் எனக்கன்பானவர்களே நம்மை தாழ்த்தி அவர் கையில் அற்பணிப்போம். பூலோகத்திலும், பரலோகத்திலும் கர்த்தர் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வோம்.

அல்லேலூயா!...

கிறிஸ்துவுக்குள்

அன்பு சகோதரி .அனுஷூயா டேவிட்சன்



## அறிவோம் அர்த்தங்கள்

வேதபுத்தகத்தை வாசிக்கும்போது புழக்கத்திலில்லாத, புரியாத சில வார்த்தைகளை நாம் காணும்போது குழம்பிவிடுகின்றோம். அவ்வித வார்த்தைகளை தொகுத்து அதன் அர்த்தங்களை அறிவதே ‘‘அறிவோம் அர்த்தங்கள்’’என்ற இந்த பகுதி. இதுபோன்று உங்களுக்கு தெரிந்த வார்த்தைகளையும் எழுதுங்கள். அனைவரும் அறிவோம் அர்த்தங்களை.

| | | |
|---|---|---|
| 1. அளகபாரம் | = | கூந்தல் (உன். 6:5) |
| 2. அசுப்பிலே | = | நொடிப் பொழுதிலே (எரே. 4:20) |
| 3. அயுக்தமுமான | = | முட்டாள்தனமான (2 தீமோத். 2:23) |
| 4. சக்கந்தமுமானோம் | = | *இகழ்ச்சியுமானோம்* (சங். 79:4) |
| 5. ஓரிணை | = | ஒரு ஜோடி (1 சாமு. 11:7) |
| 6. கோளிகை கழுதை | = | பெண் கழுதை (ஆதி. 45:23) |
| 7. துன்னாளை | = | துன்ப நாளை (யோபு 30:25) |

# 2012 முதல் 2014ஆம் ஆண்டிற்கான செயற்குழு மற்றும் விதிமுறை கண்காணிப்பாளர் மற்றும் கணக்கு தணிக்கையாளர்



தலைவர்



செயலாளர்



பொருளாளர்



பெண்கள் ஐக்கிய குழு தலைவி



வாலிப ஐக்கிய குழு தலைவர்



விதிமுறை கண்காணிப்பாளர்



கணக்கு தணிக்கையாளர்

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

**தலைவர். சகோ. ரவிச்சந்திரன்**

**23913675 -- 66889706**

**செயலாளர் சகோ. ஸ்டாலின்**

**66021072**

பொருளாளர் சகோ. விசு

**90049925**

பெண்கள் ஐக்கிய சங்க தலைவி

**சகோதரி : ஜெயக்கொடி ஜான் வெஸ்லி**

**23731904 - 99145593**

வாலிப ஐக்கிய குழு தலைவர்

**சகோ. அற்புதராஜ் 60692485**

சபையின் அஞ்சல் விலாசம்

***your Name..... Post box no 46795, Fahaheel, 64018, KUWAIT.***

*Church E mail Address*

***ahmaditamil.kw@hotmail.com***

***Church Website Address***

***www.ahmaditamilcongregation.org***

தங்களது ஜெப விண்ணப்பங்கள் எதுவாக இருந்தாலும் எங்களுக்கு தெரிவிக்கவும், உங்களுக்காக ஜெபிக்க எப்பொழுதும் ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது

Private circulation